அமர்வு வழக்கு எண்.44/2020 நாள் 17.08.2023 அசா 2—நவிநாத் த-பெ மூர்த்தி

(1முதல் 5 எதிரிகள் ஆஜர்)

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

1. நான் தற்போது எங்கு வசிக்கிறேன் என்றால், நெல்லிக்குப்பம் அம்பேத்கர் நகரில் வசிக்கிறேன். நான் காவல்நிலையத்திற்கு காலை பத்து மணிக்கு சென்றேன். நானும் என் நண்பர் பிரதாப்பும் காவல்நிலையம் சென்றோம். இந்த வழக்கு தொடர்பாக புகாரை நான் தான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. சாட்சி தானாக, இறந்தவரின் தம்பி கண்ணன் புகார் கொடுத்தார். நான் காவல்நிலையம் செல்வதற்கு முன்பு கண்ணன் புகார் அளித்திருந்தாரா, அல்லது நான் காவல்நிலையம் செல்லும்போது என் முன்னிலையில் புகார் அளித்தாரா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. சாட்சி மீண்டும், நான் செல்வதற்கு முன்பே அவர் புகார் அளித்திருந்தார். ( சாட்சி அளிக்கும் விளக்கங்களை நீதிமன்றம் பதிவு செய்யக்கூடாது என்று வழக்கறிஞர் கடுமையாக ஆட்சேபணை தெரிவித்தார். சாட்சி ஒரு வினா தொடர்பான விளக்கங்களை அளிக்க தகுதியான நபர் என்றும், வினாவிற்கு தொடர்பில்லாத விளக்கங்களை மட்டுமே சாட்சி அளிக்கக்கூடாது என்பதால் ஆட்சேபணை நிராகரிக்கப்பட்டு, சாட்சியம் தொடர உத்திரவிடப்படுகிறது).

2. நான் சாட்சி கண்ணனை காவல்நிலையத்தில் பார்க்கவில்லை என்றால், பார்த்தேன். எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் பத்து மணிக்கு பார்த்தேன். அப்போது எதிரி சுமன்ராஜ் காவல்நிலையத்தில் இருந்தாரா என்றால், எனக்கு தெரியாது, நான் உள்ளே போகவில்லை. சுமன்ராஜை பிடித்துவிட்டதாக போலிசார் கூறினார்களா என்றால் ஆமாம். எப்போது கூறினார்கள் என்றால், காலை ஒன்பது மணிக்கு கூறினார்கள். சம்பவம் தொடர்பாக நடைபெற்ற ஆர்பாட்டத்தின்போது போலிசார், இரண்டு பேரை பிடித்துள்ளதாகவும், அதில் ஒருவர் சுமன்ராஜ் என்றும் போலிசார் கூறினார்கள். பிறகு பாடியை எடுத்துச்செல்லுமாறு எங்களை கேட்டுக்கொண்டார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை எந்தபோலிசாராவது விசாரித்தார்களா

என்றால், நடராஜன் என்ற போலிசார் விசாரித்தார். ஆர்பாட்டம் நடந்த இடத்தில் நடராஜன் என்னை விசாரித்தார்.

3. சண்டை நடந்தது பற்றி தெரியுமா என்றால் இரண்டு சண்டை நடந்தது, எந்த சண்டையை பற்றி கேட்கிறீர்கள். இறந்தவேல்முருகன், இறப்பதற்கு முன்பாக எந்த இடத்தில் சம்பவம் நடந்தது என்றுதெரியுமா என்றால், மேல்பாதி எல்லைபிடாரியம்மன் கோயிலில் சண்டை நடைபெற்றது. நாங்கள் எங்கள் ஊரில் கேக் வெட்டி கொண்டாடினோமா என்றால், எங்கள் ஊருக்கும் அவர்கள் ஊருக்கும் செல்லும் ரோடில் கேக் வெட்டி கொண்டாடினோம். நாங்கள் மெயின்ரோடில் கேக் வெட்டி கொண்டாடினோமா என்றால் இல்லை, எங்கள் ஊருக்கும் அவர்கள் ஊருக்கும் உள்ள ரோடில் குமரன் கடை எதிரே ரோடு ஓரமாக கேக் வெட்டி கொண்டாடினோம். நெல்லிக்குப்பத்திலிருந்து செல்லும்போது இடது பக்கமாகவும், அம்பேத்கர் நகரிலிருந்து வரும்போது வலது பக்கமாகவும், குமரன் கடை உள்ளது. யாரெல்லாம் கேக் வெட்டி கொண்டாடினோம் என்றால், நான், கவியரசன், ஹரிஹரன், பிரகாஷ், வேல்முருகன், கண்ணன் ஆகியோர் கேக் வெட்டி கொண்டாடினோம். போலிசார் என்னை விசாரித்தபோது, குமரன் கடை எதிரே கேக் வெட்டி கொண்டாடினோம் என கூறியுள்ளேனா என்றால், அவ்வாறு போலிசார் கேட்கவில்லை, அதனால் குறிப்பிடவில்லை. எங்கள் ஊர் அம்பேத்கர் நகரிலிருந்து பார்த்தால் எல்லைபிடாரியம்மன் கோயில் தெரியுமா என்றால் தெரியாது. நான்வசிக்கும் ஊர் கீழ்பாதி இல்லையென்றும், அம்பேத்கர் நகர் தான் என்றால் ஆமாம்.

4. யாரெல்லாம் கேக் எடுத்துக்கொண்டு சென்றோம் என்றால், நான், கவியரசன், ஹரிஹரன், பிரகாஷ், வேல்முருகன், கண்ணன் ஆகியோர் சென்றோம். எதிரிகள் தடிகளை எடுத்தவுடன் நான் எவ்வளவு தூரம் ஓடினேன் என்றால், பார்க்கும் தூரத்தில் தான் நான் இருந்தேன். ரொம்ப தூரமெல்லாம் ஓடவில்லை. 150 அடி தூரம் ஓடியிருப்பேனா என்றால் இல்லை, பார்க்கும் தொலைவில் தான் இருந்தேன். ( சாட்சி நீர் அருந்துவதற்காக அனுமதி கேட்டதின் பேரில் அனுமதி அளிக்கப்பட்டு பின்னர் சாட்சியம் தொடர்ந்தது ).

5. மேல்பாதி என்ற ஊர் தனி, அம்பேத்கர் நகர் என்ற ஊர் தனி என்றால் ஆமாம். அவ்வாறே கீழ்பாதி என்ற ஊரும் தனி என்றால் ஆமாம். " நாங்கள் எங்கள் இடத்தில் கேக் வெட்டி கொண்டாடினோம்" என முதல்விசாரணையில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் நான் குமரன் கடை எதிரே கேக் வெட்டியதை தான் அவ்வாறு கூறியுள்ளேன். எங்கள் ஊர் என நான் குறிப்பிட்டுள்ளது எங்கள் பகுதியான அம்பேத்கர் நகர் பற்றி கிடையாது. நாங்கள் கேக் வெட்டி கொண்டாடிய இடம் மேல்பாதி பகுதியை சார்ந்தது என்றால், அவ்வாறு கூற முடியாது. குமரன் கடை எதிரே கேக் வெட்டி கொண்டாடும்போது, மேல்பாதி எல்லைபிடாரியம்மன் கோயிலில் நடைபெறும் விஷயங்கள் தெரியாது என்றால் தெரியும். குமரன் கடை அமைந்துள்ள பகுதிக்கும், எல்லைபிடாரியம்மன் கோயிலுக்கும் இடையே ஏதேனும் கரும்பு தோட்டம் உள்ளதா என்றால் இல்லை. முதல்எதிரி சுமன்ராஜ் தடியை எடுத்து சாவுடா என்று சொல்லி, வேல்முருகனின் தலை, காது, கன்னம் ஆகிய இடங்களில் அடிக்கவில்லை என்றால், சரியல்ல, அடித்தார். எனக்கு நான்கு திசைகள் தெரியுமா என்றால் தெரியும். எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி முதல்எதிரி சுமன்ராஜ் அடித்தார் என்றால், திசையெல்லாம் குறிப்பிட்டு கூற இயலாது. ஆனால் அடித்தார். நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும், நீதிமன்றத்தில் வேண்டுமென்றே சம்பவம் தொடர்பாக முதல்எதிரி அடித்ததாக திசைகளை பற்றி கூட கூறாமல், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் பார்க்கும் தூரத்தில் கும்பலாக நின்று அடித்தார்கள்.

6. நாங்கள் கேக் கொண்டு சென்று கொடுக்கும்போது போலிஸ் வேன் வந்ததா என்றால் ஆமாம். போலிஸ் வேன் மீது கல் எடுத்து அடித்துவிட்டதாக லத்தி சார்ஜ் செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அப்போது தான் முதல்எதிரி சுமன்ராஜை போலிசார் பிடித்துக்கொண்டார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் அங்கு நின்றிருந்த சமயத்தில், நாங்கள் கேக் கொடுக்க சென்றோம் என்றும், அப்போது போலிஸ் வேன் வந்தது என்றும், அதனால் அங்கிருந்து எல்லோரும் ஓடிவிட்டோம் என்றால், வேல்முருகனை அடித்துக்கொண்டிருந்தார்கள், அப்போது போலிஸ் வேன் வந்தது, போலிஸ் வேனை பார்த்ததும் நான் ஓடிவிட்டேன். எதிரிகள் ஓடினார்களா என்று எனக்கு தெரியாது. நான் எந்த சம்பவத்தையும்

நேரில் பார்க்கவில்லை என்றும், நான் அசா 1 கண்ணனுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் இந்த சம்பவத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் 2 முதல் 5 வரையிலானவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

7. குமரன்கடை எதிரே நாங்கள் கேக் வெட்டாதிருந்தால் எதிரிகள் கேக் வெட்டியதை நாங்கள் பார்த்திருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தது இரவு பணிரெண்டேகால் மணி என்றால் ஆமாம். எங்கள் பகுதியை சேர்ந்த அமிர்தராஜ், ஸ்டீபன்ராஜ், கட்டையன், கரிகாலன், கபிலன், சீனி, கோபிநாத் ஆகியோர் எதிரிகள் கேக் வெட்டி கொண்டாடிய பகுதிக்கு சென்று, டான்ஸ் ஆடி பிரச்சினை செய்து அந்த விவரத்தை எங்களிடம் வந்து கூறினார்கள் என்றால் இல்லை. அந்த விவரத்தை எங்களிடம் கூறினார்கள் என்றும், அதனால் தான் எங்கள் பகுதியை சேர்ந்தவர்கள் அங்கு சென்று பிரச்சினை செய்தார்கள் என்றால் இல்லை. அவர்கள் சிறிய வயதுடையவர்கள் என்பதால் அவர்களை இப்பிரச்சினையில் ஈடுபடுத்தக்கூடாது என முடிவு செய்து, நாங்கள், எதிரிகள் கேக் வெட்டிய இடத்திற்கு வாழ்த்து சொல்ல சென்றதாக ஜோடித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. போலிசார் என்னை விசாரித்தபோது, நாங்கள் எதிரிகளின் பகுதிக்கு சென்று, புத்தாண்டு வாழ்த்து சொல்ல சென்றோம் என்றும், ஆனால் அதற்கு அவர்கள் தகராறு செய்ய வந்துவிட்டு, வாழ்த்து சொல்ல வந்துள்ளதாக பொய் சொல்கிறீர்களா என எங்களை அசிங்கமாக திட்டினார்கள் என போலிசாரிடம் கூறியுள்ளேனா என்றால் ஆமாம். அச்சமயம் எங்களுக்குள் தள்ளுமுள்ளு ஏற்பட்டதாக போலிஸ் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. கேக் வெட்டுகின்றவர்கள் புத்தாண்டை கொண்டாடுவதால் அவர்கள் தடி வைத்திருக்க வாய்ப்பு இல்லை என்றும், எனவே நான் எதிரிகள் தடி எடுத்து அடிக்க வந்ததாக கூறுவது முற்றிலும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் ஆறு நபர்கள் சென்றோம். மோட்டார் சைக்கிளில் சென்றோமா என்றால் நடந்து சென்றோம். எங்கள் பகுதியை சேர்ந்த சிறுவர்கள் எதிரிகளின் பகுதிக்கு சென்று, டான்ஸ் ஆடிவிட்டு, தகராறு செய்துவிட்டு

வந்ததால், எதிரிகளை தாக்குவதற்காக நாங்கள் தான் தயாராக தடிகளை எடுத்து சென்றோம் என்றால், சரியல்ல. குமரன் கடை அருகே டிரான்ஸ்பார்மர் உள்ளது என்றால் ஆமாம். குமரன் கடை அருகே டிரான்ஸ்பார்மரில் யார் மின் இணைப்பை நிறுத்திவிட்டு சென்றது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கோயில் அருகே புத்தாண்டு கொண்டாடப்பட்ட இடத்திற்கு நாங்கள் சென்றபோது வெளிச்சம் இல்லை என்றும், இருட்டாக தான் இருந்தது என்றால் இல்லை, லைட் இருந்தது. அந்த நேரத்தில் போலிசார் ரோந்து வந்தார்கள் என்றும், அந்த ஜீப்வெளிச்சத்தில் தான் போலிசாரையும், எதிரிகளையும் பார்த்துவிட்டு நாங்கள் ஓடினோம் என்றால் போலிஸ் ஜீப் லைட் வெளிச்சம் வந்தபிறகு ஓடினோம் என்பது சரியல்ல. போலிஸ் ஜீப் வரும் சத்தம் கேட்டு நாங்கள் ஓடினோம் என்பது உண்மை. எதிரிகள் பகுதியில் நாங்கள் சென்று அவர்களிடம் பிரச்சினை செய்தபோது, ஏற்பட்ட தள்ளுமுள்ளுவில் எங்கள் தரப்பினரை சேர்ந்தவர்கள் அடித்ததில் தான் வேல்முருகனுக்கு காயம் ஏற்பட்டு அங்கேயே அவர் பக்கத்தில் உள்ள புதரில் சென்று விழுந்துவிட்டார் என்றால், சரியல்ல. போலிஸ் ஜீப்பை பார்த்து தப்பி ஓடும்போது வேல்முருகன் அடிப்பட்டதை நான் கவனித்திருக்க வாய்ப்பு இல்லை என்றும், நாங்கள் தப்பித்து ஓடுவதில் தான் கவனமாக இருந்தோம் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் தான் வேல்முருகன் எங்களுடன் வந்தாரா என்று கூட தெரிந்துகொள்ளாமல், காலையில் அவரை தேடிச்சென்றதாகவும், வேல்முருகன் புதரில் விழுந்து கிடந்ததாகவும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

9. போலிசார் என்னை விசாரித்தபோது ஆஜர் எதிரிகள் ஐந்து பேரும், மற்றொரு சுந்தர் த-பெ குணசேகரன் என்பவரும் சேர்ந்து வேல்முருகனை வளைத்துக்கொண்டார்கள் என்று குறிப்பாக தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபோது, எதிரி கவியரசன் என்பவர் வேல்முருகனின் வலது புருவத்திலும், நெற்றியிலும் தடியால் அடித்ததாகவோ, வலது காதிலும், இடது பக்க விலா எலும்பிலும் சுந்தர் தடியால் குத்தியதாகவோ, நான் போலிசாரிடம் தெரிவிக்கவில்லை என்றும், முதல் விசாரணையில் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி கவியரசனும், சுந்தரும் நான்

முதல்விசாரணையில் கூறியுள்ளவாறு வேல்முருகனை தாக்கவில்லையென்றும், அதனால் தான் நான் அந்த விவரத்தை போலிசாரிடம் கூறவில்லை என்றும், பார்க்காத விஷயத்தை பற்றி பொய்யாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*

அமர்வு வழக்கு எண்.44/2020 நாள் 17.08.2023 அசா 4-- அஜித்குமார்

(1முதல் 5 எதிரிகள் ஆஜர்)

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு

முதல் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

1. நான் பணிரெண்டாம் வகுப்பு வரை படித்துவிட்டு டாக்ஸி டிரைவராக வேலை பார்க்கிறேன்.

எதிரிகள் 2 முதல் 5 வரையிலானவர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை

2. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. கண்ணன் சொல்லித்தான் தெரியும் என்றால் ஆமாம். கண்ணன் கூறியதில் எவ்வளவு உண்மை எவ்வளவு பொய் என எனக்கு குறிப்பாக தெரியாது என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

(சாட்சிக்கு Crl.M.P. No. 1910/2023 மற்றும் Crl.M.P. No. 1911/2023 ல் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின்படி தினப்படி வழங்க எதிரிகளுக்கு உத்திரவிடப்படுகின்றது).

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/ her to be Correct.*
*Sd/-S.Prakash*
*I Additional District Judge*
*Cuddalore.*